දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ....................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/26/07/01/01

දිනය
திகதி
Date } 2010-06-28

சுற்று நிருப இலக்கம் : 2010/23

சகல மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள்,

சகல வலயக்கல்விப் பணிப்பாளர்கள்,

சகல அதிபர்கள்

## பாடசாலைக் கணினி ஆய்வுகூடங்களிலுள்ள கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் கணினி வலயமைப்புச் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய மட்டத்திலான கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் வலயமைப்பு பராமரிப்பு வேலைத்திட்டம்

கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல் பிரிவினால் உத்தரவாத காலம் (Warranty) முடிவடைந்த கணினிகளினதும் உதிரிப்பாகங்களினதும் பராமரிப்பு விடயங்களும் அவ்விடயம் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் அறிவை மேம்படுத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாக கொண்டு தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் தேசிய மட்டத்தில் வன்பொருள், வலையமைப்பு பராமரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சினால் இக்குழுவினருக்கு சிறந்த ஒரு பயிற்சி பல்கலைக்கழகங்களினூடாக வழங்கப்பட்டுள்ளதுடன் அக்குழுவினரின் அறிவுத்திறன் போன்றவற்றை மேம்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இத்திறமை வாய்ந்த குழுவைப் பயன்படுத்தி மாகாணத்தால் மாவட்ட மட்டத்தில் உத்தரவாதக் காலம் முடிவடைந்த கணினிகளையும், உதிரிப்பாகங்களையும், வலையமைப்பையும் பராமரிக்கும் வேலைத்திட்டமொன்று 2009ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டம் திருப்திகரமாக நிறைவேற்றப்பட்ள்ளமையால் 2010ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் வருடங்களில் தொடர்ச்சியாக தேசிய வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தினூடாக பரீட்சிக்கப்பட்ட கணினி, உதிரிப்பாகங்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அறிக்கை, வருடாந்த தொகை மதிப்பீட்டில் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையென (Bord of survey) கவனத்தில் கொண்டு

செயற்படுமாறு அறியத்தருகின்றேன். அவ்வறிக்கையின் மாதிரிப்படிவம் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதோடு இது தொடர்பான செயற்பாடுகளை கீழ்வருமாறு முறைப்படுத்தப்படல் வேண்டும்.

**செயற்பாடு**

1. ஓவ்வொரு வருடமும் இரண்டாம் தவணை முடிவில் வரும் விடுமுறைக் காலத்தை கருத்தில் கொண்டு இத்தேசிய மட்டத்திலான பராமரிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

2. அந்த மாகாணங்களின் தகவல் தொழில்நுட்ப இணைப்பாளரால் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். இதற்கமைய ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒரு பாடசாலையை கேந்திர நிலையமாகக் கொண்டு ஏனைய பாடசாலைகளுக்கு இவ்விடயத்தை முன் கூட்டியே தெரியப்படுத்தி அப்பாடசாலைகளின் கணினிகளையும், உதிரிப்பாகங்களையும் எடுத்து வரும்படி அறிவுறுத்தல் வழங்கவும்.

3. இந்த உபகரணங்களை எடுத்து வரும் போது கணினி ஆய்வு கூடத்திற்கு பொறுப்பான ஆசிரியர் அல்லது பாடத்திற்கு பொறுப்பான ஆசிரியர் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் எடுத்து வரும் உபகரணங்கள் தொடர்பான பட்டியலின் இரு பிரதிகளைத் தயாரித்து ஒரு பிரதியை பாடசாலை அதிபரிடமும் மறு பிரதியை கேந்திர நிலையத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும். பட்டியலில் உபகரணங்களை இலகுவாக இனங்காணக் கூடிய வகையில் பதிவு மேற்கொள்ளப்படல் வேண்டும். (தொடரிலக்கம், மாதிரி இலக்கம் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)

4. இவ்வாறு பராமரிக்க வேண்டிய கணினிகளின் எண்ணிக்கையைக் கொண்டு மாவட்ட ரீதியாக நடாத்தப்படும் வேலைத்திட்ட நாட்களின் எண்ணிக்கையை தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதிகூடியவை 4 நாடகள் மட்டுமே ஆகும். அதற்கமைவாக ஒவ்வொரு மாகாண வேலைத்திட்டங்களையும் ஒன்று முடிந்ததன் பின்னர் ஒன்றாக திட்டமிட்டு நடாத்துவதோடு இது தொடர்பாக கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவுடன் கலந்தாலோசித்து தீர்மானங்களை மேற்கொள்ளவும்.

5. சம்பந்தப்பட்ட பராமரிப்புக்குத் தேவையான உபகரணங்களை கொள்முதல் செய்தல் அந்த பாடசாலைகளினாலேயே பொறுப்பேற்கப்பட வேண்டுமென்பதோடு, இதற்காக தரமான உள்ளீடுகள் தொடர்பான சுற்றறிக்கையில் தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. பாடசாலையில் இவவொதுக்கீடுகள் போதிய அளவு இல்லாதவிடத்து இது தொடர்பாக வலையக் கல்விப் பணிமனை அல்லது மாகாண கல்வித் திணைக்களம் இவற்றைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இந் நடவடிக்கைகளுக்கு மாகாண தகவல் தொழில்நுட்ப இணைப்பாக்க அதிகாரியே பொறுப்பாக இருந்து செயற்படுவர்.

6. இவ்வேலைத்திட்டத்திற்காக பங்கு கொள்ளும் கணினி அல்லது வலையமைப்பு குழுவின் வளவாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் அந்தந்த மாகாணங்களினாலேயே வழங்கப்படல் வேண்டும்

கல்வி அமைச்சின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவினால் இவ்வேலைத்திட்டத்தினையும் இணைந்து செயற்படுவதோடு ஒவ்வொரு மாவட்டங்களிலும் பராமரிப்பு வேலைத்திட்டத்திற்கான தேசிய மட்ட பயிற்சி குழுவில் உள்ள இவ்விடயம் சம்மந்தமான சிறப்பு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களின் உதவியை சிக்கலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அந்தந்த மாவட்ட வேலைத்திட்டத்திற்கு பெற்று தருவதோடு இந்த முழு வேலைத்திட்டத்திற்குமே இத்தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவின் ஒரு அதிகாரியும் நியமிக்கப்பட்டுள்ளார். அந்தந்த மாவட்டங்களில் செயற்படும் பராமரிப்பு வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு உபகரணம் தொடர்பாக சிபார்சு செய்து வழங்கப்பட்டுள்ள படிவத்தின்படி தயாரித்து பெற்றுக் கொடுக்க வேண்டும். அவ் உபகரணங்கள் தொடர்பான உரிய சிபார்சுகள் உத்தியோக பூர்வமான சிபார்சுகளாக கருதப்பட வேண்டும்.

சிபார்சுகளிற்கமைவாகவே அதிபர்கள், செயற்பட வேண்டும் என்பதை மேலதிகமாக அறியத் தருகின்றேன்.

பாடசாலைகள் மத்தியில் நிலவுகின்ற தகவல் தொழில்நுட்ப உபயோகத்திற்கான உபகரணங்களாக (tools) பராமரிப்பு சம்மந்தமாக அதிகளவு நிதியை செலவிடாமல் அரசாங்கத்தின் செலவை குறைக்கும் இவ்வேலைத்திட்டத்திற்கு தங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பதை அறியத்தருகின்றேன்.

சுனில். எஸ். சிறிசேன
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்:-**

1. சகல மாகாணக் கல்வீச் செயலாளர்கள்
2. சகல மாகாணத் தகவல் தொழில்நுட்ப இணைப்பாளர்கள்
3. சகல மாகாண வலய மட்ட கணக்காளர்கள்

## கணினி திருத்தம் செய்யும் விபர அறிக்கை
## ஒரு உபகரணத்திற்கு ஒன்றை பயன்படுத்தவும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பாடசாலை பெயர், முகவரி, தொலைபேசி | | | |
| 2. | திருத்தம் செய்யப்பட வேண்டிய பகுதி | 1.System Unit | | |
| | | 2. Moniter Board | | |
| | | 3.Moniter | | |
| | | 4.வேறு | | |
| 3. | கணினி வகை | | | |
| 4. | மொனிடர் வகை தொடர் இல | | | |
| 5. | Key board தொடர் இல | | | |
| 6. | வேறு | | | |
| 7. | திருத்தம் மேற்கொள்ள வேண்டிய பகுதி | | | |
| | a. | | | |
| | b. | | | |
| | c. | | | |
| 8. | தேவையான உதிரிப்பாகங்கள் | | | |

| | 8. பெயர் | வகை | விபரம் |
|---|---|---|---|
| | a. | | |
| | b. | | |
| | c. | | |
| | | | |

| | | |
|---|---|---|
| 9. | இறுதி அறிக்கை (கீழே தரப்பட்டுள்ளவற்றின் 123 தேவையற்றவற்றை வெட்டி விடவும்) | |
| | 1. இவ் உபகரணம் பூரணமாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது<br>2. இவ் உபகரங்களை கொண்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது | |
| | கொள்வனவு செய்ய வேண்டிய பெயர் | விபரம் |
| | a. | |
| | b. | |
| | c. | |
| | 3. இவ் உபகரணம் பயன்படுத்த முடியாது. பரீட்சித்தவர் | |

| | பெயர் | அலுவலக முகவரி | கையொப்பம் |
|---|---|---|---|
| | a. | | |
| | b. | | |
| | c. | | |

மேற்குறிப்பிடப்பட்டவை சரியானவை என்றும் இக்கணினி உதிரிப்பாகங்கள் உரிய முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

உதிரிப்பாகங்கள் பிரதி/ உதவி /கல்விப்பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) கல்வி அமைச்சு/ மாகாண கல்வித் திணைக்களம்